## THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

---

Monday, the 30th November 1970.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

### I. QUESTIONS AND ANSWERS

### STARRED QUESTIONS

*Educational Concessions*

*21. Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) whether educational concessions from the Harijan Welfare Department are made available to Hindu Harijans only and not to converts to Christianity ; and

(*b*) whether there is any proposal to extend the said concessions to all Harijans irrespective of their religion ?

**கல்விச் சலுகைகள்**

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு வேளாண்மை அரிசன—நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரிசன நலத் துறையிலிருந்து வழங்கப்படுகிற கல்விச் சலுகைகள் இந்து அரிசனங்களுக்கு மட்டும் கிடைக்கின்றனவேயன்றி கிறிஸ்தவ சமயத்துக்கு மாறியவர்களுக்குக் கிடைப்பதில்லையா ?

(இ) மதச் சார்பில்லாமல் எல்லா அரிசனங்களுக்கும் மேற்சொன்ன சலுகைகளை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனுமுள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குள்ள கல்விச் சலுகைகள் அவ்வகுப்பிலிருந்து மதம் மாறியவர்களுக்கும் அளிக்கப்படுகின்றன.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. சந்தோஷம் : மதம் மாறியவர்களுக்கு அளிக்கப்படுகிறது என்றால், அவர்கள் மதம் மாறிய அந்தத் தலைமுறைக்கு மாத்திரம்

[30th November 1970

அளிக்கப்படுகிறதா அல்லது அவர்கள் முதியோர்கள் மதம் மாறியிருந்தாலும், அவர்களுக்கு அளிக்கப்படுகிறதா? அந்தத் தலைமுறையில் மதம் மாறியவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்று சொல்வது சரியா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : முதல் தலைமுறைக்குத் தரப்படுகிறது. அதற்கு முன்னால் இருக்கிற தலைமுறைக்குத் தரப்படுவதில்லை.

திரு. டி. சந்தோஷம் : அப்படியானால், ஒரு தலைமுறைக்குள் அவர்களுக்கு சமுதாயத்தில் உள்ள பொருளாதார நிலை, ஒடுக்கப்பட்டவர்களாக உள்ள நிலை உயர்ந்துவிடுவதில்லை ; மாறிவிடுவதில்லை. கிறிஸ்தவர்களான பிறகும் சேரியில்தான் வாழ்கிறார்கள். வசதியற்றவர்களாக ஒடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கும், குறிப்பாக மதச் சார்பற்ற அரசில் மதம் மாறிய காரணத்தால், சலுகைகளை நிறுத்துவது சரியல்ல. இந்த சந்தர்ப்பத்தில் கேரள அரசு சமீபத்தில் 14-8-1970-ல் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதன்படி

"....the Government are pleased to order that all educational concessions allowed to Scheduled Castes will be made available to Christian converts from Sch. Castes up to seven generations."

ஏழு தலைமுறைக்குக் கேரள அரசில் கணக்கிடப்படுகிறது. அப்படி ஏதாவது ஒரு மாறுதல் செய்தால், இந்த ஏற்றத்தாழ்வு தவிர்க்கப்படலாம். அரசு அதை யோசிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பொதுவாக இந்து மதத்தில்தான் தீண்டாமை இருப்பதாகக் கருதப்படுகிறது. வேறு எந்த மதத்திலும் தீண்டாமை இருக்கவில்லை. இந்து மதத்தில் தீண்டாமை அனுஷ்டிக்கப்படுகிற காரணத்தால், அதிலுள்ள அரிஜனங்களுக்கு இந்தச் சலுகை என்றும் மதம் மாறியவர்களுக்கு இல்லை என்றும் மத்திய அரசு ஆணை இருக்கிறது. மாநில அரசு அவற்றையெல்லாம் கருதாமல், இந்து அரிஜனங்களுக்கு என்னென்ன சலுகைகள் கொடுக்கிறோமோ அதை இவர்களுக்கும் கொடுக்கிறோம். கல்விச் சலுகை, உணவு விடுதிகள் சலுகை, உபகாரச் சம்பளம் அத்தனையும் மதம் மாறிய அரிஜனங்களுக்கும் கொடுக்கிறோம். நீண்ட காலத்திற்கு முன் மதம் மாறியவர்களாக இருந்தால், அவர்கள் முழுக்க முழுக்க கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவ மதம் சம்பந்தப்பட்ட முறையில், என்னென்ன சலுகைகள் பெற்றுக் கொள்கிறார்களோ அத்தனையும் பெற்றுக் கொண்டவர்கள். எனவே அவர்களுக்குக் கொடுப்பது நியாயமில்லை என்றுதான் இந்த அரசு கருதிக்கொண்டிருக்கிறது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இந்தக் காலத்தில் இண்டர் காஸ்ட், இண்டர் ரெலிஜியஸ் கல்யாணங்கள் சாதாரணமாக நடைபெறுகின்றன. ஒருவருடைய தாயார் கிறிஸ்தவ அரிஜனாக இருக்கலாம்; தகப்பனார் இந்துவாக இருந்து அவர்கள் திருமணம் செய்துகொண்டால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு இந்து அல்லது கிறிஸ்தவர் என்று சொல்வதற்கு உரிமை இருக்கிறதா ? திட்டவட்டமாக சில சமயம் தகப்பனார் சார்ந்துள்ள மதத்தைச்

30th November 1970]

சேர்ந்தவர்கள் என்று இந்தச் சலுகை மறுக்கப்படுகிறது. ஆகையால் பெற்றோர்கள் இந்து, கிறிஸ்தவர் ஆகிய இரண்டு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்களுக்கு இதனால் பாதகம் ஏற்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பொதுவாகவே அப்படிப்பட்ட சிக்கல்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும் தகப்பனார் எந்த சமயத்தைச் சேர்ந்தவரோ அந்த சமுதாயத்தின் அடிப்படையில்தான் அவர்களுக்கு பிறக்கிற பிள்ளைகளுக்குச் சொத்துரிமை வழங்கப்படுகிறது. அந்த அடிப்படையில் கலப்புத் திருமணங்களில் தகப்பனார் மதத்தை ஒட்டி அந்தச் சலுகைகள் வழங்கப்படும்.

திரு. டி. சந்தோஷம் : மதம் மாறிய காரணத்தால், பொருளாதார நிலை அவர்களுக்கு மாறுவதில்லை. மேலும் தீண்டப்பெருதவர்களாகவே ஒடுக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். நீங்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது என்றும் ஒப்புக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவ மதம் ஜாதியை ஏற்றுக்கொள்வதில்லை. கேரள அரசு செய்திருப்பது போல, ஏழு தலைமுறை என்று அவர்கள் செய்திருப்பதைப்போலச் செய்யாவிட்டாலும் இரண்டுக்கும் நடுநிலையாக ஐந்து தலைமுறையில் உள்ளவர்களுக்கு, பொருளாதார நிலை மாறுத நிலையில் இருப்பவர்களுக்கு, சேரியில் வாழ்கிறவர்களுக்கு, அந்தக் கிறிஸ்தவ அரிஜனங்களுக்கு இந்தச் சலுகை கிடைக்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பொதுவாக கேரளத்தில் மதம் மாறிய அரிஜனங்களின் நிலைமை எப்படியிருக்கிறது என்று தெரியாது. நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே பல்லாண்டுகளுக்கு முன்பே மதம் மாறிய கிறிஸ்தவர்கள் அந்த மதத்தின் அடிப்படையில் தரப்படுகிற சலுகைகளைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் நடத்திய கல்விக் கூடங்களில் பங்குபெற்றிருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் மிஷன்கள், கதோலிக் மிஷன்கள் மூலமாக பிரத்யேகமாக மதம் மாறத்தான் வேண்டுமென்று பிரசாரம் செய்து அப்படி மதம் மாறியவர்களுக்குச் சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். மதத்தின் அடிப்படையில் அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வெள்ளைக்காரர்கள் காலத்தில் மதம் மாறியவர்களுக்குப் பிரத்யேகச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலானவர்கள் படிப்பிலும் பொருளாதார நிலையிலும் அந்த வகையில் உயர்ந்திருக்கிறார்கள். திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் இந்துக்களைவிட கிறிஸ்தவ அரிஜனங்கள் அதிகமாகப் படித்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிற காரணத்தாலும் தான் நமது மாநில அரசு இதைப்பற்றி வேறுவிதமான முடிவை எடுக்கமுடியாத சூழ்நிலையில் இருக்கிறது.

*Small, Scale Industries*

*22. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that the Small Scale Industries are in difficulties due to non-availability of raw materials such as Pig Iron, B.P. Sheets and non-ferrous metals at fixed prices ; and

(*b*) if so, the action taken by the Government in this matter ?